# வலிகாமத்தில் அமெரிக்கமிஷனரியினர் மேற்கொண்ட கல்விப்பணி: ஒரு வரலாற்று மீளாய்வு

**Sangavai, S***

**ஆய்வுச் சுருக்கம்**

பல்வேறுபட்ட இன, மத, மொழி, பண்பாட்டு, கலாசார அம்சங்களை உள்ளடக்கிய தேசங்களில் இலங்கைக்கும் தனித்துவமான இடமுண்டு. இந்து சமுத்திரத்தின் செல்வாக்கைப் பெற்ற இலங்கைத் தீவானது நாற்புறமும் கடலால் சூழப்பட்டது. இவ் அமைப்பானது காலத்துக்கு காலம் பல்வேறுபட்டவர்கள் இலங்கைத் தீவுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்கு வழியேற்படுத்திக் கொடுத்தது. இவ் இலங்கை தீவின் வட பாகத்தே தனக்கென தனித்துவமான இடத்தினை பெற்ற இராச்சியமாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது. பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட கீழைத்தேசம் நோக்கிய ஐரோப்பியரின் வருகை இலங்கையிலும் தாக்கம் செலுத்தியது. இப் பிண்ணனியில் தான் 1816ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமெரிக்க மி'னரியினர் யாழ்ப்பாணத்தில் குறிப்பாக வலிகாமப் பிரதேசத்தில் தமது பணிகளை முன்னெடுத்து சென்றனர். யாழ்ப்பாணத்தில் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க காலப்பகுதியாக 19ஆம் நூற்றாண்டு விளங்குகின்றது. இக் காலப்பகுதியிலேயே சுதேசக் கல்வி மரபானது பல மாற்றங்களுக்கு உட்பட்டு புதிய பரிணாமத்தினைப் பெற்றுக் கொண்டது. ஏனெனில் மதத்தினைப் பரப்புவதனை நோக்கமாகக் கொண்டு கீழைத்தேசம் நோக்கி வந்த அமெரிக்கமிஷனரியினர் தமது நோக்கத்தினை அடைவதற்கான கருவிகளில் ஒன்றாக கல்விப் பணியினை முன்னெடுத்து சென்றனர். இக் கல்விப் பணியானது யாழ்ப்பாண சமூகத்தின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணியாக அமைந்து கொண்டது. யாழ்ப்பாண சமூகத்தினைப் பொறுத்தவரையில் மரபுவழிக் கல்வி முறையே செல்வாக்குப் பெற்றுக் காணப்பட்டதுடன் பெண் கல்வியும் முதன்மைப்படுத்தப்படவில்லை. இவ்வாறான சூழலில் தான் அமெரிக்கமிஷனரிகளால் மேலைத்தேச கல்வி முறைகளான பாடசாலைக் கல்வி, ஆங்கிலக்கல்வி, உயர்கல்வி என்பன அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பெண்கல்வி தொடர்பான விழிப்புணர்ச்சியும் ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்கமிஷனரிகளால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பாடசாலைகள், விடுதிப் பாடசாலைகள், பெண்கள் பாடசாலைகள் என்பன உருவாக்கப்பட்டு கல்வி வளர்ச்சி துரிதப்படுத்தப்பட்டது. அந்தவகையில் இவ் ஆய்வானது அமெரிக்க மிஷனரியினரால் அறிமுகம் செய்யப்பட்ட மேலைத்தேச கல்வி முறைகளான பாடசாலை கல்வி, ஆங்கிலக்கல்வி, உயர்கல்வி முறைகள் பற்றியும், அமெரிக்க மிஷன் வருகைக்கு முற்பட்ட கால யாழ்ப்பாண கல்வி நிலை பற்றியும், அமெரிக்கமிஷனரியினர் வலிகாமத்தில் முன்னெடுத்து சென்ற கல்விப் பணி யாழ்ப்பாண சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஆற்றிய பங்கினையும் ஆய்வு செய்கின்றது. இவ் ஆய்வில் வரலாற்று, விபரண மற்றும் கள ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்:** அமெரிக்க மிஷன், கல்விப் பணி, பாடசாலை, பெண்கல்வி

To whom correspondence should be addressed: sangavai1989@gmail.com

* Department of History, Eastern University of Sri Lanka.